**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C.288/2020**

**Prosecution witness : அ.சா.1 Date : 15.04.2024**

| | |
|---|---|
| Name : இளவரசி | Taluk : குமாரபாளையம் |
| Husband Name : கார்த்தி | Calling : – |
| Village: குமாரபாளையம் (கம்பன் நகர்) | Age : 26 |

(A2 and A3 present. Other all accused absent. Filed petition and allowed.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது குமாரபாளையத்தில் எனது பெற்றோருடன் குடியிருக்கிறேன். நான் திருச்செங்கோட்டில் உள்ள விவேகானந்தா பொறியியல் கல்லூரியில் மூன்றாமாண்டு வரை படித்துவிட்டு நின்றுவிட்டேன். இந்த வழக்கின் எதிரி என்னுடைய கணவர் கார்த்தி என்னுடைய மாமா முறை ஆவார். மேட்டூர் தெர்மலில் வேலை செய்து வந்தார். எதிரி கார்த்தி கொளத்தூரிலுள்ள கீழ்மூலப்பாளையத்தில் அவரது பெற்றோருடன் குடியிருந்து வந்தார். நானும், எதிரி கார்த்திக்கும் உறவினர் என்பதால் எனது வீட்டிற்கு அடிக்கடி வந்து சென்றதாலும் சுமார் 5 ஆண்டுகளாக விரும்பி வந்தோம். என்னை எதிரி கார்த்திக் திருமணம் செய்துக்கொள்வதாக ஆசைவார்த்தைக்கூறி என்னை அடிக்கடி வெளியில் அழைத்து சென்றுவந்தார். அவ்வாறான சூழ்நிலையில் எங்களுக்குள் உறவு ஏற்பட்டு கர்ப்பமாகி விட்டேன். இதுசம்மந்தமாக நான் எதிரி கார்த்திக்கிடம் சொன்னபோது என்னை திருமணம் செய்துகொள்வதாக சொல்லிவிட்டு பலக்காரணங்கள் சொல்லி காலம் தாழ்த்தி வந்தார். இதுசம்மந்தமாக நான் பெற்றோரிடம் நடந்த விசயத்தை

சொன்னேன். என்னுடைய பெற்றோரும் எதிரியின் பெற்றோரிடம் இதுசம்மந்தமாக பேசியபோது உன்னுடைய மகள் கர்ப்பமானதற்கு என்னுடைய மகன் காரணமில்லை என்று சொன்னார்கள்.

2) 11.02.2019 ம் தேதி என்னுடைய பெற்றோருடன் திருச்செங்கோடு அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார்மீது விசாரணை செய்த ஆய்வாளரிடம் எதிரி கார்த்திக் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அன்றைய தினமே இருவரும் இரவு 10.00 மணியளவில் மாலை மாற்றி திருமணம் செய்துக்கொண்டோம். திருமணத்திற்கு பிறகு என்னுடைய கணவர் வீடான கொளத்தூரில் என் மாமனார், மாமியார் ஆகியோருடன் அவரது வீட்டிற்கு சென்று குடும்பம் நடத்தி வந்தேன்.

3) அதன்பிறகு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததை மனதில் வைத்துக்கொண்டு என் மாமனார் சரவணன், மாமியார் ராணி இருவரும் என்னை கொடுமைப்படுத்தி, கெட்டவார்த்தையால் பேசினார்கள். மாமனார், மாமியார் இருவரும் எனக்கு சாப்பாடு போடாமல் அடித்து துன்புறுத்தி வந்தார்கள். என்னுடைய கணவர் கார்த்திக் அவருடைய பெற்றோரின் பேச்சை கேட்டுக்கொண்டு 04.03.2019 ம் தேதி இரவு வீட்டிலிருந்து வெளியே சென்றவர் வீடு திரும்பவில்லை. என்னுடைய மாமனாரும், மாமியாரும் உன்னால் தான் எனது மகன் வீட்டைவிட்டு வெளியே சென்றுவிட்டார் என்று சொல்லி என்னை வீட்டைவிட்டு வெளியே தள்ளி கதவை மூடிக்கொண்டனர். நான் இரவு முழுவதும் வெளியே தான் இருந்தேன். இந்த தகவலை எங்கள் வீட்டிற்கு அருகே குடியிருக்கும் சித்தி செந்தாமரைக்கு சொல்லியவுடன் என்னை அழைத்துக்கொண்டு அவரது வீட்டிற்கு சென்றார். பிறகு கொளத்தூர் காவல் நிலையத்தில் 08.03.2019 ம் தேதி புகார் கொடுத்தேன். கொளத்தூர் காவல் நிலையத்தில்

CSR மனு ரசீது எண். 39/2019 போட்டுக்கொடுத்தனர்.

4) காவல் நிலையத்தில் பெரியோர்கள் பேசியதன் பேரில் நான் மீண்டும் என் மாமனார் வீட்டிற்கே சென்றேன். 2 மாதம் கழித்து என்னுடைய கணவர் கார்த்திக் குமாரபாளையத்திலுள்ள கணபதி நகரை சேர்ந்த எனது பெரியப்பா மகள் மைதிலியை இரண்டாவது திருமணம் செய்துக்கொண்டார் என்று என்னுடைய மாமனார் சரவணன் என்னிடம் சொன்னார். அதற்கு ஆதாரமாக மைதிலி என்பவர் அவர் கைப்பட எழுதிய கடிதத்தில் என்னுடைய கணவர் கார்த்திக் உடன் சென்றுவிட்டதாகவும் எழுதியுள்ளார். அதற்கு உடந்தையாக மைதிலி பெற்றோர்கள் சுப்ரமணி, லதா, சக்திவேல், அவருடைய நண்பர் பாலா ஆகியோர் உடந்தையாக இருந்துள்ளனர்.

5) இதுசம்மந்தமாக 16.11.2019 ம் தேதி மேட்டூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார்கொடுத்தேன். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகாரிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **(புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (கொளத்தூர் காவல் நிலையத்தில் நான் முதலில் கொடுத்த புகாருக்கு காவல் நிலையத்தில் கொடுத்த மனு ரசீது எண்.39/2019 அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/−அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**